தலைப்பு 222 - இலங்கை இராணுவம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இராணுவத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, இலங்கை இராணுவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி, கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி சமப்பிக்கப்பட வேண்டிய இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை இராணுவத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க நியாயமாகத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குஇணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டபட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு இதன் படி, முறைமை ஆக்கபூவமான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஓட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கடற்படையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள சமர்ப்பிக்கப்படுகையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவித்துள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறித்துரைக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடு இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் இணங்கி உள்ளன எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) இலங்கை இராணுவத்தல் முன்னைய ஆண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் தேவைப்பாடு இன்மையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பௌதீகச் சொத்துக்கள் ரூபா 4.69 மில்லியன் தொகையும், கணனி மென்பொருள் ரூபா 16.09 மில்லியன் தொகையும் பூர்த்தி செய்யப்படாத கட்டிடங்கள் ரூபா 530.53 மில்லியன் தொகையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிவுறுத்தல்கள் பெறப்பட்டு கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

### 1.6.2 பொது வைப்புக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 04 வைப்புக் கணக்குகளில் நிலவிய ரூபா 66.95 மில்லியன் தொகை 02 ஆண்டுகள் வரை தீர்க்கப்படாது காணப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், வைப்புத் தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் படி, ரூபா 68.90 மில்லியன் தொகையான நிலுவையான கடன் மீதி 1 வருடம் முதல் 05 வருடங்களிற்கும் மேலான காலமாக நிலவிவந்த போதிலும் அக் கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான கடன் மீதிகள் விரைவாக தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையான கடன் மீதிகள் அறவிடப்பட்டு வருகின்றன. |

### 1.6.4 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| தீர்க்கப்படாத கட்டுநிதிக் கணக்கில் ரூபா 85.25 மில்லியன் தொகையான மீதி நிலவியது. | நிதிப் பிரமாணம் 373(I) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பதவியணியினர் பயிற்சிச் செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 300 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 233.92 மில்லியன் தொகை எஞ்சியிருந்தது. | தேவைப்பாட்டின் படி, ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த வழங்கல் நிறுவகத்துடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராமையால் செலவினங்கள் ஏற்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் பிணைகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 04 செலவின விடயங்களிற்கு உரித்தான ஏற்பாட்டில் சேமிப்புகளிற்கு மேலதிகமாக ரூபா 15.63மில்லியிற்கு மேலதிகமான பொறுப்புகளிற்கு உட்பட்டிருந்தது | ஏற்பாட்டு எல்லைக்குள் செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்குப் போதிய ஏற்பாடு கிடைக்கப்பெறாததன் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் மூலம் பட்டியல்கள் தீர்க்கப்படுவதற்கு நேர்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 2.3 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வேறு 04 அமைச்சுக்களிடம் இருந்தும் 02 அலுவலகங்களில் இருந்தும் பல்வேறு செயற்பாடுகளைச் செய்துகொள்வதற்காக ரூபா 1,016.66 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் இலங்கை இராணுவத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 939.96 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்பாடு குறிப்பாக மேற்கொள்ளப்பட்டு ஆண்டின் போது பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக போதிய திரவ ரீதியான பணம் கிடைக்கப்பெற்றிராமையின் காரணமாக ஏற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 ஏற்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இராணுவத்தின் 2016 ஆம் ஆண்டின் வருடாந்த தேவைப்பாட்டிற்காக 75,000 (கறுப்பு நிற உயர் பாத பூட்ஸ் சோடிகள்) கொள்வனவு செய்வதற்காக விலை மனுக் கோரப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனருடன் உடன்படிக்கைகள் 2018 யூலை 02 ஆம் திகதியே மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடன்படிக்கையின் பிரகாரம், 2019 பெப்ரவரி 16 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வழங்கல்கள் பூர்த்தியாகியிருக்க வேண்டியதுடன் 2019 யூன் 15 ஆம் திகதி வரை வழங்கல் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், உரிய இருப்பு 2019 மே 13 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு நடைமுறைகள் முறையாக்குவதற்கான தேவைப்பாடும் வருடாந்த தேவைப்பாட்டின் படி, குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த தேவைப்பாடு 75,000 அளவானமையால் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகள் ஆராயப்பட்டதை அடுத்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறே, குறித்த வழங்கல் நிறுவகம் வழங்கல் காலப்பகுதியின் போது கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறியிருந்தது. |
| (ஆ) | 399 உணவுக் கொள்கலன்களின் கொள்வனவிற்காக 2017 மே 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விலை மனுக் கோரல்களின் படி, 06 நிறுவகங்களில் இருந்து விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காகத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்ட நிறுவகமே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவகத்தின் விலைமனுவான ரூபா 72,160 தொகையைப் பார்க்கிலும் ரூபா 9,540 தொகையால் அதிகரித்த தொகையாகக் காணப்பட்டது. இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவகத்தால் அப் பொருள் குறித்த தரத்தில் இன்மை குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அக் காரணத்தால், கொள்கலன்கள் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், பின்னர் ரூபா 2,000 விலைக் கழிவுடன் ரூபா 79,700 தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் படி, கொள்வனவுகள் குறித்த கொள்வனவு அங்கீகாரத்தின் படி கொள்வனவு செய்யப்பட்டு முறைமையின் குறைபாடுகளைச் சீராக்குவதற்கும் அதற்குப் பொறுப்பான தரப்பினரை இனங்கண்டுகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் படி, கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

ஆகக் குறைவான விலை மனுவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டிராததன் காரணமாக ரூபா 30.28 மில்லியன் தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நாட்டின் வட பகுதியில் காவல் கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த "ஸ்டான்டர்ட்" இரக 379 துவிச்சக்கர வண்டிகள் காங்கேசந்துறை5 ஆம் யுத்த உபகரண படைப்பிரிவுக் களஞ்சியம் உள்ள வளாகத்தில் திறந்த வெளியில் தரித்து நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே கலைக்கப்பட்ட பிரிவுகளால் பயன்படுத்தப்பட்டிருந்த 355 இரட்டை இரும்புக் கட்டில்கள் களஞ்சிய வளாகத்தில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. | சொத்துக்கள் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். | குறித்த பிரிவுகள் கலைக்கப்பட்டதை அடுத்து துவிச்சக்கர வண்டிகளில் பிரதேசத்தின் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அத் துவிச்சக்கர வண்டிகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. களஞ்சிய வசதிகள் இன்மையால் இரும்புக் கட்டில்கள் திறந்த வெளியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. |

### 3.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை இராணுவத்தின் 169 சம்பவங்களிற்கு உரித்தான ரூபா 13,600.30 மில்லியன் கூட்டுத்தொகைப் பெறுமதியான நட்டங்களும் இழப்புகளும் இனங்காணப்பட்டிருந்தன. 37 சம்பவங்களிற்கு உரித்தான 05 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 88.29 மில்லியனும், 63 சம்பவங்களிற்கு உரித்தான ரூபா 10 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 637.41 மில்லியனும் காணப்பட்டன. மேலும், 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை இராணுவத்தின் சாலாவ முகாமில் இடம்பெற்ற தீ இழப்பின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 12,829.22 மில்லியன் தொகையும் இதில் உள்ளடங்கியுள்ளது. மீளாய்வாண்டின் இறுதியின் போதும் இச் சம்பவங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படுவதற்கோ அல்லது கைவிடுவதற்கோ பொறுப்பான தரப்பினர் களிடம் இருந்து இழப்பை அறவிட்டுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவாக உரிய தீர்ப்பனவு நடவடிக்கைகள் சமநிலைப் படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**3.4 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இராணுவத் தலைமையகம் இருந்த காணியும் கட்டிடங்களும் விடுவிக்கப்படுவதற்கு நேர்ந்ததன் காரணமாக இராணுவத்தின் கிளைகளும் பணிப்பாளர் காரியாலயமும் இயங்குவதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் கட்டிடங்கள் பெறப்படுவதற்கு ரூபா 1,566.45 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | கட்டிட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் விரைவாகப் பூர்த்திசெய்யப்பட வேண்டும். | கொழும்பு நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கட்டிடங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக, கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்படுவதற்கு நேர்ந்தது. |
| (ஆ) | 2018 திசெம்பர் மாதம் அம்பேபுஸ்ஸவில் உள்ள இலங்கை சிங்கப் படைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | சீமேந்துக் கற்களின் உற்பத்திச் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் போது உற்பத்திசெய்யப்பட்ட 25,779 சீமேந்துக் கற்கள் இராணுவத்தின் உட்பகுதிகளிற்கும், 32,763 வெளித்தரப்பினர்களிற்கும் ஒரு கல் ரூபா 34 படி விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், முகாமின் உள்ளகத் தேவைப்பாடுகளிற்காக வெளிச் சந்தையில் முறைப்படி ஒரு புளொக் கல் ரூபா 65 படியும், ரூபா 68 படியும் 5,600 கற்களும் 3,600 கற்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 608,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. கற்கள் உற்பத்தி செய்துகொள்ளப்பட்டிருப்பின் | படைப்பிரிவின் சீமேந்துக் கல் செயற்திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சீமேந்துக் கற்கள் உள்ளக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். | சீமேந்துக் கல் செயற்திட்டம் பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட நிறுவகம் ஒன்றாகாமையாலும் இலங்கை ரெலிகொம் ‘‘ரெயின் போ’’ பக்கங்களில் பட்டியலிடப்பட்ட ஓர் நிறுவகமாகாமையாலும் முகாமின் தேவைப்பாட்டிற்காக சீமேந்துக் கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 0.30 மில்லியன் சேமித்துக்கொள்ள முடிந்திருக்கும். | | |
| (ii) | முகாம் வளாகத்தில் வருடாந்த தெங்கு உற்பத்தி 29,041 காய்களானதுடன் அத் தேங்காய்கள் முகாமின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது ஒரு தேங்காய் ரூபா 20 முதல் ரூபா 25 இற்கு இடைப்பட்ட விலையில் ஊழியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. முகாமின் உணவுத் தேவைப்பாட்டிற்காக 1 கி.கி. ரூபா 70 படி 119,026 கி.கி தேங்காய்கள் வெளி வழங்குனர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்காக ரூபா 8.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | தேங்காய் விளைச்சல் முகாமின் தேவைப்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். | இராணுவ முகாம்களில் உணவுத் தேவைப்பாட்டிற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தில் திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு வெளி வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | முகாம் வளாகத்தில் காணப்பட்ட ஓர் கருங்கல்லைப் பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டு முதல் 2018 மார்ச் மாதம் வரை கருங்கல் உற்பத்திச் செயற்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அதன் வருமானம் ரூபா 7.14 மில்லியன் பெறுமதியான 2,213 கியூப் கருங்கல் உற்பத்தி இராணுவத்தின் பயன்பாட்டிற்காகவே விற்பனை செய்யப்பட்டிருந்தன. விற்பனை வருமானம் இராணுவ உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளிற்காக படைப்பிரிவு நிறுவகத் தலைவரின் கணக்கிற்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் மாதம் இச் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் தலைவரின் கணக்கில் இருந்து ரூபா 2.03 மில்லியன் செலவில் பெறப்பட்ட கல் அரைக்கும் இயந்திரமும் வேலைத்தளமும் கைவிடப்பட்டிருந்தது. | உழைக்கப்பட்ட வருமானத்தில் ஒரு பகுதி அரச திரட்டு நிதிக்குச் செலவு வைக்கப்பட வேண்டும். | படைப்பிரிவின் சகல தரப்பினரதும் நலன்புரிக்காக தேவையான நிர்மாணிப்புகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் திரட்டு நிதிக்குச் செலவு வைக்கப்படவில்லை. |
| (இ) | மத்தேகொடவில் உள்ள 16 வேலைத்தள படைப்பிரிவின் தொழில்நுட்பக் களஞ்சியத்தில் நிலவிய 16 வகைகளிற்கு | விளைவற்ற இருப்புப் பயன்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பழுதுபார்த்தல் | எதிர்காலத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தான 156 பிரிவுகள் 08 வருடங்களிற்கு மேலான காலமாகவும், பழுதுபார்த்தல் நடவடிக்கைகளிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் 02 முதல் 05 வருட காலமாக பழுதுபார்க்கப்படாதிருந்தன. | நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஈ) | 2018 திசெம்பர் 11 ஆம் திகதி 07 ஆவது இலங்கை இராணுவ சேவைப் படைப்பிரிவின் எரிபொருள் நிரப்பு நிலைய ஆய்வின் போது புத்தகங்களின் படி, எரிபொருள் இருப்பு மீதி மற்றும் பௌதீக மீதிக்கும் இடையே சுபர் டீசல் வகையிலான 1,199 லீட்டர் மிகை ஒன்று நிலவியமை அவதானிக்கப்பட்டது. | எரிபொருள் இருப்புப் பதிவேடுகளின் படியான மீதிக்கும் பௌதீக மீதிக்கும் இடையே மிகை மற்றும் பற்றாக்குறை நிலவுவதற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இருப்புப் பதிவேடுகளின் படியான மீதிக்கும் பௌதீக மீதிக்கும் இடையே சமமின்மை பொது நடைமுறையில் 500 லீற்றர் அளவிலான மாற்றத்தில் நிலவுவதாகும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 200,242 ஆனதுடன் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 167,234 ஆனமையால் 33,278 வெற்றிடங்கள் நிலவின. உத்தியோகத்தர் களின் நிலையில் 1,472 பதவிகளும் துணை உத்தியோகத்தர்கள் 31,806 பேரின் வெற்றிடங்களும் காணப்பட்டன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. சிவில் பதவியணியின் அங்கீகரிக்கப் பட்ட பதவி எண்ணிக்கை 11,146 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 10,306 ஆனமையால் 1,044 வெற்றிடங்களும் 204 மிகையான பதவியணியினரும் உள்ளனர். வெற்றிடங் களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதவியணியில் பற்றாக் குறையோ மிகையோ ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதவியணியில் மிகையும் பற்றாக்குறையும் நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |